கள்ளக்குறிச்சி மாவட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள், இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கும் விழா வாணாபுரம் பகண்டைக் கூட்டுச்சாலை சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது, இதில் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு ரூ.33,00,000 லட்சங்கள் மதிப்பில் 30 மாற்றுத்திறனாளிகளுக்கு பெட்ரோல் ஸ்கூட்டரை வழங்கினார். இதில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சுப்பிரமணியன், மூட நீக்கியல் வல்லுநர் பிரபாகரன், ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.ராஜேந்திரன், எஸ்.அய்யனார், வி.கிருஷ்ணமூர்த்தி, பி.என்.ஆர்.அசோக் குமார் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.

திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி பேரூர், சந்தை பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதிய அங்கன்வாடி கட்டிடம் அமைக்கும் பணியினை மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு தொடங்கி வைத்து சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் எஸ்.உமாசந்திரன், வெண்மதி சிங்காரவேலன், சசிகுமார், சரவணன், கணேசன், முனிகிருஷ்ணன், திருகுமரன், சிவபிரகாசம், ரேவதி, திருவாசகி, காந்தி, செந்தில்குமார், அரசு சங்கர், வினோத், அகிலன், தனுஷ், தீரன், முரளி மற்றும் அரசு துறை அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

அமைச்சர் இரா. இராஜேந்திரன் – சென்னை வர்த்தக மையத்தில் துவக்கி வைத்த

தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் ‘ பயணச் சந்தை’

மூன்று நாட்களில் – 5000க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 25-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிக்காட்டுதலின்படி முதன்முறையாக சுற்றுலாத்துறையால் தமிழ் நாட்டில் நடத்தப்பட்ட தமிழ்நாடு பயணச்சந்தையை சுற்றுலாத்துறை அமைச்சர். இரா. இராஜேந்திரன் கடந்த 21.03.2025 அன்று துவக்கி வைத்தார்.

இந்த பயணச்சந்தையானது மார்ச் 21 முதல் 23 வரை தொடர்ந்து மூன்று நாட்களுக்கு சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்றது. இப்பயணச்சந்தையின் இரண்டாம் நாளான மார்ச் 22-ஆம் தேதி பிற்பகல் முதல் பொது மக்கள் பார்வையிட அனுமதியும் வழங்கப்பட்டது. மாநிலத்தின் வளமான மற்றும் மாறுபட்ட சுற்றுலா வாய்ப்புகளை வெளிப்படுத்தவும், தொழில்துறை ஒத்துழைப்பை வளர்க்கவும், சுற்றுலாத் துறையில் முதலீடுகளை ஈர்க்கவும் இந்த நிகழ்வு ஒரு முதன்மை தளமாக செயல்படும்.

தமிழ்நாடு பயணச்சந்தை நிகழ்விடத்தில், Travel and Tourism Fair அமைப்பின் மூலம் பயணச்சந்தை நடத்தப்பட்டது ஒரு கூடுதல் சிறப்பாகும். இதில் தெலுங்கானா, உத்தரகண்ட், தமிழ்நாடு சுற்றுலாத்துறை, நேப்பால் டூரிஸம், ஆந்திரப்பிரேதேசம் டூரிஸம், டெல்லி டூரிஸம், இந்தியா டூரிஸம், ஜார்கண்ட் டூரிஸம், கேரளா டூரிஸம், பஞ்ஜாப் டூரிஸம், உள்ளிட்ட மாநில அரசு சுற்றுலாத்துறை அரங்குகளும் அமைக்கப்பட்டு பயணச் சந்தைக்கு வருகை புரியவர்களுக்கு சிறந்த அனுபவமாக விளங்கியது.

பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்து, மாநிலத்தின் கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாப்பதை உறுதி செய்து, நிலையான மற்றும் பொறுப்பான சுற்றுலாவை மேம்படுத்த தமிழ் நாடு அரசு குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அவ்வகையில் தமிழ்நாடு பயணச்சந்தையும் ஒரு சிறந்த முன்னெடுப்பாகும். இப்பயணச்சந்தையில் தமிழ்நாடு முழுவதும் பல் வேறு மாவட்டங்களிலிருந்து சுற்றுலா பயண ஏற்பாட்டாளர்கள் பயண முகவர்கள் மற்றும் தங்கும் விடுதிகள் சார்ந்த தொழில் முனைவோர் ஆகியோர் கலந்துகொண்டு, சுமார் 115 அரங்குகள் அமைத்துள்ளனர். மேலும் இப்பயணச் சந்தைக்கு சிங்கப்பூர், மலேசியா, அயர்லாந்து, ஸ்பெயின், நெதர்லாந்து, துருக்கி, ஆகிய அயல்நாடுகள் மற்றும் 32 உள்நாட்டு முகவர்கள் மற்றும் முதலிட்டாளர்கள் பங்குபெற்று தமிழ்நாட்டு முகவர்களுடன் தொழில் சார்ந்த கலந்துரையாடல் மேற்கொண்டனர்.

தமிழ்நாடு சுற்றுலாப் பயணச்சந்தை 2025, பயண ஏற்பாட்டாளர்கள், பயண முகவர்கள், விருந்தோம்பல் வல்லுநர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் உள்ளிட்ட உள்நாட்டு மற்றும் சர்வதேச பங்குதாரர்களை ஒன்றிணைத்து, மாநிலத்தின் விரிவான சுற்றுலா வாய்ப்புகளை கண்டறியும். பாரம்பரிய சுற்றுலா, சுற்றுச்சூழல் சுற்றுலா, ஆரோக்கிய சுற்றுலா மற்றும் ஊக்கத்தொகைகள், மாநாடுகள் மற்றும் கண்காட்சிகள் (MICE) போன்ற முக்கிய பிரிவுகளில் வளர்ந்து வரும் போக்குகள், பிராந்திய மேம்பாட்டு முயற்சிகள் மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் குறித்த விவாதங்களுக்கு இந்த நிகழ்வு வழிவகுத்துள்ளது.

உத்திசார் முன்முயற்சிகள் மற்றும் வலுவான கொள்கை ஆதரவின் காரணமாக, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் தமிழ் நாடு தொடர்ந்து முன்னிலை வகிக்கிறது. தமிழ் நாடு பயணச் சந்தை 2025, புதிய வணிக வாய்ப்புகளை வெளிப்படுத்துவதுடன், தொழில் கூட்டாண்மையை வலுப்படுத்துவதுடன், மாநிலத்தின் பார்வையை உலகளாவிய சுற்றுலா மையமாக மாற்றியுள்ளது.

இந்த பயணச்சந்தையில் சர்வதேச அளவில் பயண ஏற்பாட்டாளர்கள் ஹோட்டல் மற்றும் தங்கும் விடுதி முகவர்கள் மற்றும் மாநில அளவிலான பயண ஏற்பாட்டாளர்கள் ஹோட்டல் மற்றும் தங்கும் விடுதி முகவர்கள் மற்றும் பொது மக்கள் என 5000க்கும் மேற்பட்ட நபர்கள் கடந்த மூன்று நாட்களில் தமிழ் நாடு பயணச்சந்தைக்கு வருகை புரிந்துள்ளனர் என சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.

ஏப்ரல் 4 அன்று - இராமநாதபுரம் திருஉத்திரகோசமங்கை

மங்களநாத சாமி திருக்கோயில் குடமுழுக்கு! உள்ளூர் விடுமுறை அறிவித்திடுவீர்!

சட்டப்பேரவையில் – காதர்பாட்சா முத்துராமலிங்கம் வலியுறுத்தல்!

சென்னை, மார்ச் 25 -

“ஏப்ரல் 4 அன்று நடைபெறும் இராமநாதபுரம் - திருஉத்திர கோசமங்கை - மங்களநாத சாமி திருக்கோயில் குட முழுக்கிற்கு உள்ளூர் விடுமுறை அறிவித்திட வேண்டும் என சட்டப்பேரவையில் கழக சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் வேண்டுகோள் விடுத்தார்.

கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு-

காதர்பாட்சா முத்துராமலிங்கம்: இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருஉத்திரகோசமங்கை மங்களநாதசுவாமி திருக்கோயில் என்ற சிவத்தலம் நவக்கிரகங்களே இல்லாத சிவத்தலம் என்று பக்தர்களால் போற்றப்படுகிறது. அந்த சிவத்தலத்தில், இலங்கை மன்னன் இராவணனுக்கும், மண்டோதரிக்கும் திருமணம் நடந்ததற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. சேது மன்னர்களின் பராமரிப்பில், இராமநாதபுரம் சமஸ்தானத்தின்கீழ் இருந்த அத்திருக்கோயிலுக்கு, நம்முடைய கழக அரசு ஆட்சிக்கு வந்தவுடன், அமைச்சர் அவர்கள், ரூபாய் 2 கோடி என்று மதிப்பீடு செய்து, குடமுழுக்கு நடத்துவதற்காக முதல் நிதியை வழங்கினார்கள். தனியார் பங்களிப்புடன் மிகப் பிரம்மாண்டமான இராஜகோபுர வளாகங்கள் மற்றும் கிழவன் சேதுபதி மன்னன் விட்டுச்சென்ற அர்த்த மண்டபம் போன்றவற்றை பராமரித்துக் கொண்டு வருகிறார்கள். வரவிருக்கின்ற ஏப்ரல் மாதம் 4 ஆம் தேதி அங்கு குடமுழுக்கு விழா நடைபெறவிருக்கிறது. அத்திருக்கோயிலுக்கு, குறிப்பாக கொங்கு மண்டலத்திலிருந்து கோயம்புத்தூர், கரூர், ஈரோடு, நாமக்கல், சேலம் ஆகிய பகுதிகளிலிருந்து அதிகமான பக்தர்கள் வருகை தருகிறார்கள்.

அந்தக் குடமுழுக்கு விழாவிற்கு ஏறத்தாழ 5 இலட்சம் பக்தர்கள் இராமநாதபுரத்தில் கூடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நம்முடைய கழக அரசின் சார்பில் உள்ளூர் விடுமுறை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் குடமுழுக்கு பணிக்காக முதல் நிதி வழங்கினார்கள்.

அத்திருக்கோயில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின்கீழ் வருவதால், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுடைய கண் காணிப்பில் அந்தக் குடமுழுக்கு விழாவை நடத்த வேண்டும் .

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, இராமநாதபுரம் சமஸ்தானத்தின்கீழ் இருந்த ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட திருஉத்தரகோசமங்கை திருக்கோயில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின்கீழ் கொண்டுவரப்பட்டு, அரசினுடைய நிதியாக 2 கோடி ரூபாய் வழங்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அடுத்த மாதம் 4ஆம் தேதி வெகுசிறப்பாக குடமுழுக்கு நடைபெறவிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் கோரிய கோரிக்கைகள் முழுவதுமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவர் விரும்பியவாறு, அவர் மகிழ்ச்சியுறுகிற வகையில், இந்த ஆட்சி நிச்சயமாக குடமுழுக்கு விழாவை நடத்தும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் திராவிட மாடல் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை மண்டலம் பேட்டை 20வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஷேக் மன்சூர் ஏற்பாட்டில் ரமலான் பெருநாளை முன்னிட்டு 500 ஏழைகளுக்கு பித்ரா அரிசி, மளிகை பொருட்கள் ஆகியவற்றை நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் மேயர் ராமகிருஷ்ணன், பகுதி துணைச் செயலாளர் சுபுஹானி, வட்டச் செயலாளர் ஆறுமுகம், வேல்முருகன், மாமன்ற உறுப்பினர் மாரியப்பன், பிரேம் நசீர், அலி, ரபீக், டெல்லி சம்சுதீன், முத்து வேலாயுதம், காக்கா முருகன், லாலாகுமார், சிந்துபாய், நைனா முகமது, ரபீக், ரகுமான், பக்ருதீன், இர்பான், தௌபீக், பேட்டை அப்துல், ரசூல் உள்ளிட்ட கழகத்தினர் உள்ளனர்.

அதிகரித்து வரும் மின் தேவைகளைக் கவனத்தில் கொண்டு

தமிழ்நாடு முழுவதும் புதிய துணை மின் நிலையங்கள் அமைக்க அரசு நடவடிக்கை!

சட்டப்பேரவையில் – அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தகவல்!

சென்னை, மார்ச் 25-

சட்டப்பேரவையில் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, அதிகரித்து வரும் மின் தேவைகளை கவனத்தில் கொண்டு, தமிழ்நாடு முழுவதும் புதிய துணை மின் நிலையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றன என்று குறிப்பிட்டார்.

இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு: -

மு.சக்கரபாணி: வானூர் தொகுதி, கிளியனூர் கிராமத்தில் உள்ள உதவி மின் பொறியாளர் அலுவலகத்தைத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

அமைச்சர் வி.செந்தில் பாலாஜி: வானூர் தொகுதி, வானூர் ஒன்றியம், கிளியனூர் கிராமத்தில் உள்ள உதவி மின்பொறியாளர் அலுவலகத்தை உதவி மின் கோட்டப் பொறியாளர் அலுவலகமாக தரம் உயர்த்த வேண்டிய அவசியம் தற்போது இல்லை என உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மு.சக்கரபாணி: கிளியனூர் 33/11KV துணை மின் நிலையத்தை விரிவாக்கம் செய்து, 110/33KV துணை மின் நிலையமாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புவதோடு, கிள்ளியனூர் துணை மின் நிலையத்தை தரம் உயர்த்துவது என்பதற்குப் பதிலாக, துணை மின் நிலைய அலுவலகத்தைத் தரம் உயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அதற்கேற்றாற் போல் அமைச்சர் அவர்கள் பதிலளிக்குமாறுக் கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் வி. செந்தில் பாலாஜி: வானூர் தொகுதி, கிளியனூரில் மொத்தம் 16 MVA திறன் கொண்ட மின் மாற்றிகள் இயக்கத்தில் உள்ளன. இந்த மின்மாற்றிகளின் மொத்த நிறுவு திறன் 14.65 MVA ஆகும். தற்போது, கிள்ளியனூர் பகுதியின் மின் தேவையைப் பூர்த்தி செய்ய மேற்கண்ட துணை மின் நிலையமே போதுமானதாக உள்ளது. இருந்தபோதும், உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, துறையின் சார்பாக ஆய்வு செய்து, அங்கே ஏற்பட்டிருக்கிற மின் தேவையைக் கவனத்திலே கொண்டு, தேவை ஏற்படின் முன்னுரிமை அடிப்படையில் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மு.சக்கரபாணி: வானூர் தொகுதிக்குட்பட்ட கண்ணமங்கலம் கோட்டம், பொம்மையார்பாளையம் கிராமத்தில் 110/22KV துணை மின் நிலையத்தை உடனடியாக அமைக்க அரசு முன்வருமா என்பதோடு, வானூர் தொகுதி, கடலோர கிராமங்களில் புயல், வெள்ளச் சீற்றங்களின்போது மின் கம்பங்கள் சாய்ந்து மின்தடை ஏற்படுவதோடு, உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. எனவே, கடலோர பேரிடர் அபாய குறைப்புத் திட்டத்தின்மூலம் மேல்நிலை மின் பாதைகளை, புதைவட மின் கம்பிப் பாதைகளாக மாற்ற அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

விழுப்புரத்தில் புதிய துணை மின் நிலையங்கள்!

அமைச்சர் வி. செந்தில் பாலாஜி: விழுப்புரம் மாவட்டத்தில் கூடுதலாகத் தேவைப்படுகிற மின் தேவையைக் கவனத்தில் கொண்டு முதலமைச்சர் அவர்கள், விழுப்புரம் மாவட்டத்தில் மட்டும் 1,571 புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு, அதில் வானூர் தொகுதியில் 357 மின்மாற்றிகள் நிறுவப்பட்டிருக்கின்றன. அதேபோல, விழுப்புரம் மாவட்டத்திற்கு ஆறு புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கும் முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கி, அதற்கான பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. உறுப்பினர் அவர்கள் சுட்டி காட்டியிருக்கின்ற அந்தத் துணை மின் நிலையம், இந்த ஆண்டு கவனத்தில் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, மேல்நிலைக் கம்பிகளைப் புதைவட கம்பிகளாக மாற்றுவதற்கு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

முதற்கட்டமாக மாநகராட்சிப் பகுதிகளில் அந்தப் பணிகளை முழுமையாக 100% நிறைவேற்றிட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவுகளை வழங்கியிருக்கிறார்கள். அதற்கானப் பணிகளைத் தொடங்கி இருக்கிறோம். படிப்படியாக, அடுத்த நிலைகளில் நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகள் என தேவைப்படுகின்ற இடங்களை துறை கவனத்தில் கொள்ளும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்.அசோக்குமார்: பேராவூரணி தொகுதி தென்னை விவசாயிகளை அதிகம் கொண்ட தொகுதியாகும். ஆழ்க்குழாய் கிணறுகளில் உள்ள தண்ணீரை நம்பி அதிகமான விவசாயிகள் அங்கே விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். எங்களுக்குத் தனியாக செயற்பொறியாளர் அலுவலகம் ஒன்று தேவைப்படுகிறது. பட்டுக்கோட்டையிலிருந்து பிரித்து எங்களுக்கு தனியாக செயற்பொறியாளர் அலுவலகம் அமைத்துத் தருமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் வி.செந்தில் பாலாஜி: உறுப்பினர் ஏற்கெனவே செயற்பொறியாளர் அலுவலகம் கேட்டு என்னிடம் கடிதம் வழங்கியிருக்கிறார். துறைக்கு அந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அது ஆய்வில் உள்ளது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திட்ட மதிப்பீடுகள்!

மா. செந்தில்குமார்: கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி பகுதியில் மின் பற்றாக்குறை அதிகமாக ஏற்படுவதன் காரணமாக, பெருங்கூர் பகுதியிலே 110/22KV துணை மின் நிலையம் அமைப்பதற்கு 2022-ல் ஒரு மனு கொடுத்திருந்தேன். அப்போது, நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்று சொன்னீர்கள். தற்போது சடையம்பட்டில் main அமைப்பு இருக்கிறது. அதிலிருந்து பிரித்துதான் பெருங்கூருக்குக் கேட்கிறோம். அதைப் பிரித்து கொடுத்து விட்டால் அங்கிருக்கும் சிக்கல், மின் பற்றாக்குறைப் பிரச்சினைத் தீர்க்கப்படும்.

அதேபோல, SE Officeமேற்பார்வை பொறியாளர் அலுவலகம் தனியார் கட்டடத்தில்தான் இயங்குகிறது. அதையும் அந்த 3.5 ஏக்கரில் கட்டி தருவதாகச் சொல்லி மூன்று கோடி நிதி ஒதுக்கியிருப்பதாக சொன்னார்கள். அதையும் கட்டிக் கொடுக்குமாறும், சடையம்பட்டியிலிருந்து பிரித்து பெருங்கூர் பகுதிக்கு துணை மின் நிலையம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா என அமைச்சர் அவர்களை கேட்டு அமர்கிறேன்.

அமைச்சர் வி. செந்தில் பாலாஜி: கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு மூன்று புதிய துணை மின் நிலையங்கள், அதிலே உறுப்பினருடைய கள்ளக்குறிச்சி தொகுதியிலும் ஒரு புதிய துணை மின் நிலையம் அடங்கியிருக்கின்றன. 3.5 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, மின் வாரியத்திற்கு வகை மாற்றம் செய்யப்பட்டு, திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, மின்வாரியத்தினுடைய நிர்வாக அனுமதியும் பெறப்பட்டு, விரைவில் அதற்கான பணிகளை தொடங்கவிருக்கிறோம் என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொண்டு, அதே இடத்தில் அலுவலகம் கட்டுவதற்கான கோரிக்கையும் வைத்திருக்கின்றார்கள். துறை அது குறித்து ஆய்வு செய்யும் என்பதை உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

வி.அமலு: எனது குடியாத்தம் தொகுதிக்குட்பட்ட மின்சார அலுவலக கட்டடம் நான்கு ஆண்டுகளக வாடகை கட்டடங்களில் இயங்கி வருகிறது. அதுவும், மோசமான நிலையில் பழுதடைந்த கட்டடங்களில் இயங்கி வருகிறது. இதை ஒன்றிணைத்து ஒரே கட்டடமாக செயல்படுத்துவதற்கு, புதிதாக ஒரு கட்டடம் கட்டித்தர வேண்டும். அதற்கான இடவசதியும் உள்ளது. என் தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான இந்தக் கட்டடத்தை கட்டித்தர வேண்டுமென்று அமைச்சர் அவர்களை கேட்டு அமர்கிறேன்.

அமைச்சர் வி.செந்தில் பாலாஜி: உறுப்பினர் அவர்கள் இது குறித்து ஏற்கனவே என்னிடம் கடிதம் வழங்கியுள்ளார்கள். அந்தக் கடிதம் துறைக்கு அனுப்பப்பட்டு, இந்த ஆண்டு அது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென துறையினுடைய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கின்றன. எனவே, விரைவில் அதற்கான பணிகள் தொடங்கப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

இராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதி பூத் கமிட்டி ஆலோசனை கூட்டத்தில் மாநில சுற்றுச்சூழல் அணி செயலாளர் ஆர்.விநோத் காந்தி பேசினார். அருகில் மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தர மூர்த்தி, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.விநோத், மாவட்ட துணை செயலாளர் துரைமஸ்தான், தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் தொன்போஸ்கோ மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.